# விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

### சுஹுருபாய கட்டிடத்திற்கான தூய்மைபடுத்தல் மற்றும் சுகாதார சேவையினை பெற்றுக்கொள்ளல் 2024/2025

**PS/03/PB/PR/03/41/23**

1. தலைவர், அமைச்சின் கொள்முதல் குழு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 18வது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை, இலங்கை சார்பாக, சுஹுருபாய கட்டிடத்திற்கான 2024/2025 வரை ஒருவருட காலத்திற்கு தூய்மைபடுத்தல் மற்றும் சுகாதார சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. இம் மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும். (NCB)

3. ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லையில் அமைந்துள்ள 20 மாடிகள் கொண்ட பிரதான கட்டிடத்தின் மற்றும் இரண்டு உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு சொந்தமான பிரிவுகளுக்கு தூய்மைபடுத்தும் மற்றும் சுகாதார சேவைகள் வழங்குவதற்கு பொருத்தமான முன்மொழிவுகள் மற்றும் விலைகோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக்கட்டிடம் சுற்றுச்சூழல் நலனைக் கருத்தில் கொண்டு கட்டப்பட்ட கட்டிடமாகும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மாடிகளில் காணப்படும் மேசைகள், நாற்காலிகள், ஜன்னல்கள், அலமாரிகளின் வரிசைகள், கைப்பிடிகள், சுவர்கள் மற்றும் மாடிகளில் உள்ள மின்விசிறிகள் ஆகியவற்றை தினமும் சுத்தம் செய்ய வேண்டும். மனுதாரர் அந்தந்த வளாகத்தை ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுவார். அதற்காக வருகைதரும் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்ட எழுத்துப்பூர்வ அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என்பதுடன் மேலும் வருவதற்கு முன்னர் பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலமாக தெரிவிக்க வேண்டும்.

4. ஆர்வமுள்ள தகுதியான மனுதாரர்கள் பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **2024.03.22 ஆம் திகதி முதல் 2024.04.16 ஆம் திகதி** வரை **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையிலான காலப்பகுதியில் பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு நேரடியாக வருகைதந்து தலைமைக் கணக்காளரிடமிருந்து எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

5. இந்த நோக்கத்திற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மட்டுமே விலைக்கோரலை சமர்ப்பிக்க வேண்டும்.

   i. நிறுவனமானது ஒரு தனி உரிமையாளர், கூட்டாண்மை அல்லது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட வேண்டும். (ISO தரச் சான்றிதழ்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.)

   ii. அரசாங்க விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க, சேவை வழங்குதல், வரி செலுத்துதல் போன்றவற்றைச் செய்யும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (அதற்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

   iii. 03 வருடங்களுக்கும் மேலாக தொடர்புடைய சேவைகளை வழங்கும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (அதற்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

   iv. கடந்த 03 வருடங்களில் சேவைகளை வழங்கிய நிறுவனங்களின் விபரப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (தற்போது அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 05 நட்சத்திரங்களை கொண்ட விடுதிகளுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதால், அவை தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

   v. கோவிட்-19 வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

   vi. துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் இந்த கட்டிடத்தின் தேவைகளுக்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   vii. ஒப்பந்த காலத்தில் எக்காரணம் கொண்டும் விலைகளை மாற்ற அனுமதி இல்லை என்பதால் அதற்கேற்ப விலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

   viii. பயிற்சி பெற்ற பணியாளர்களை மட்டுமே பணியில் அமர்த்த வேண்டும்.

   ix. 2023 ஆம் ஆண்டு உட்பட, ஐந்தாண்டுகளுக்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ETF) மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) ஆகியவற்றில் பங்களிப்புகளைப் பெற்ற பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும்.

   x. ஊழியர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

   xi. அவசர தேவையின் போது பணியாளர்களை தூய்மைப் பணிக்காக பணியமர்த்த வேண்டும்.

   xii. கட்டிடத்தின் தன்மைக்கேற்ப ஆண் பணியாளர்களும் தேவைப்படின் சேவை வழங்குநர் அவர்களையும் பணியமர்த்த வேண்டும்.

   xiii. கட்டிடத்தை சுத்தம் செய்வதற்காக ஆகக் குறைந்தபட்சம் 27 பணியாளர்கள் பணியமர்த்த வேண்டும்.

6. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மதிப்பு ரூபாய் 5 மில்லியனுக்கும் அதிகமாக இப்பின் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண். 3 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மனுவுடன் இந்தப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறினால் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கக் கூடாது.

7. ஆர்வமுள்ள மனுதாரர்கள் பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் மீளச்செலுத்தப்படாத ரூ.4,700 (நாலாயிரத்து எழுநூறு) கட்டணத்தை செலுத்தி வைப்புத் தொகையாக செலுத்தி **2024.03.22** ஆம் திகதியிலிருந்து **2024.04.16** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நிறுவனத்திற்கு ஒரு ஏலத்திற்கு ஒரு ஏலப் படிவம் மட்டுமே வழங்கப்படும்.

8. பிற்பகல் **2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **17வது மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப்பிரிவில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **2024.04.17** அல்லது கீழ்க்புறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும். **மனு இலக்கத்தினை** மனுக்கள் அடங்கிய உறையின் மேல் இடதுபக்க மூலையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். **தாமதமாக பெறப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். 17வது மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப்பிரிவில் 2024.04.17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** விலைமனுக்கள் திறக்கப்படும். மற்றும் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி நிகழ்வில் கலந்து கொள்ளலாம். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அங்கீகாரம் இல்லாமல் பங்கேற்கும் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9. மனுக்கள் செல்லுபடியாகும் காலம் **2024.04.17 முதல் 2024.07.03** வரையாகும்.

10. அனைத்து மனுப் பத்திரங்களும் **2024.04.17 முதல் 2024.07.31 ஆம் திகதி** வரை செல்லுபடியாகும் பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் சார்பாக எடுக்கப்பட்ட **ரூ.190,000.00 (ஒரு இலட்சத்தி தொண்ணூராயிரம்)** மதிப்புக்கான மனுப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் மனுப் சமர்ப்பிக்கப்படும் மனுப் பாதுகாப்பானது ஒரு நிதி நிறுவனமாகப மத்திய வங்கியால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பின்வரும் நிபந்தனைகளின் கீழ் காணப்படல் வேண்டும். மனு ஆவணங்களில் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின் படி மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. ஒவ்வொரு கொள்முதல் செயல்முறையின் போதும் அவ்வப்போது மாறும் பணவியல் விதிமுறைகள் மற்றும் திறைச்சேரி அறிவுறுத்தல் சுற்றறிக்கைகள் தொடர்பான தேவையான திருத்தங்களை கொள்முதல் குழுவினால் செய்ய முடியும், மேலும் அமைச்சின் கொள்முதல் குழுவின் முடிவே இறுதி முடிவாக கருதப்பட வேண்டும்.

12. இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

| **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|
| தலைமை கணக்காளர், | தொ. பே. இல: 011- 2887328 |
| 17வது மாடி, சுஹுருபாய, | பொதுவான தொ.பே.இல: 0 11-2887307 |
| ஸ்ரீ சுபூதிபுர வீதி, | பொதுவான : 011-2887916 |
| பத்தரமுல்லை. | |

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
18 ஆம் மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை.

2024.03.22

SELACINE MEDIA SOLUTIONS